திருவண்ணாமலை தெற்கு மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரையாற்றினார். உடன் சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, டாக்டர் எ.வ.வே.கம்பன், சி.என்.அண்ணாதுரை. எம்பி., கோ.கண்ணன், இரா.ஸ்ரீதரன், சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், எஸ்.பன்னீர்செல்வம், பிரியா விஜயரங்கன், ப.கார்த்திவேல்மாறன், எல்.ஐ.சி. து.வேலு, ஆர்.மனோகரன், எம்.ஆர்.கலைமணி, ஏ.கே.ரத்தினகுமார், சி.ராமஜெயம், கண்ணன், பெ.குமார், ஏழுமலை உட்பட பலர் உள்ளனர்.

எம்.சி.ராஜா பெயரில் மிகப் பிரமாண்டமான கல்லூரி மாணவர் விடுதி

அண்ணல் அம்பேத்கர் தொழில் முனைவோர் திட்டம் தந்திட்ட முதல்வருக்கு நன்றி தீர்மானம்!

மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழுக் கூட்டத்தில் – பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு பேச்சு!

திருவண்ணாமலை, ஜூன், 16-

திராவிட இயக்கத் தலைவர் எம்.சி.ராஜா பெயரில் பழங்குடி மற்றும் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு மிக பிரமாண்டமான மாணவர் விடுதியை அமைத்தமைக்கும், அண்ணன் அம்பேத்கர் தொழில் முனைவோர் திட்டம் தந்த தமிழ்நாடு முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்து, திருவண்ணாமலை தெற்கு மாவட்ட திமுக ஆதிதிராவிடர் நலக்குழு, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. கூட்டத்தில் கலந்து கொண்டு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு ஒன்றிய, நகர, பேரூர் கழக ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களை அறிமுகப் படுத்தி சிறப்புரையாற்றினார்.

15.06.2025 ஞாயிற்றுக் கிழமை காலை 10.30 மணிக்கு, திருவண்ணாமலை, திருக்கோயிலூர் ரோடு, சாரோனில் உள்ள மாவட்ட திமுக அலுவலகத்தில் திருவண்ணாமலை தெற்கு மாவட்ட திமுக ஆதிதிராவிடர் நலக்குழு மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள் அறிமுகம் மற்றும் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு மாவட்ட அமைப்பாளர் எல்.ஐ.சி. து.வேலு தலைமை வகித்தார்.

மாவட்ட திமுக ஆதிதிராவிடர் நலக்குழு மாவட்ட தலைவர் ஆர். மனோகரன், துணை அமைப்பாளர் எம்.ஆர். கலைமணி, சி.ராமஜெயம், வழக்கறிஞர் கண்ணன், பெ.குமார், த.ஏழுமலை ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட துணை அமைப்பாளர் ஏ.கே.ரத்தினக்குமார் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

ஆலோசனைக் கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள்நிறைவேற்றப்பட்டன.

12.06.2025 அன்று இந்தியாவை உலுக்கிய அகமதாபாத் ஏர் இந்தியா விமான கோர விபத்தில் உயிர் இழந்த 241 பயணிகளுக்கு ஆழ்ந்த இரங்களை இந்த கூட்டம் தெரிவித்துக் கொள்கிறது.

கடந்த 22.04.2025 அன்று காஷ்மீர் பெகல்காமில் தீவிரவாதிகளின் தாக்குதலில் தங்களின் இன்னுயிரை இழந்த 26பேருக்கும் இந்த கூட்டம் ஆழ்ந்த இரங்களை தெரிவித்துக் கொள்கிறது.

திருவண்ணாமலை தெற்கு மாவட்டம், தி.மலை மேற்கு ஒன்றிய ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் மு.வெங்கட்ராமன் அவர்களின் மறைவிற்கு இந்த கூட்டம் ஆழ்ந்த இரங்களை தெரிவித்துக் கொள்கிறது.

திருவண்ணாமலை தெற்கு மாவட்ட திமுக ஆதிதிராவிடர் நலக்குழுவின் மாவட்ட அமைப்பாளர் தலைவர், துணைத் தலைவர், நகர, ஒன்றிய, பேரூர் கழக அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் என புதிய நிர்வாகிகளான எங்கள் அனைவரையும் நியமித்து கழக பணியாற்றிட வாய்ப்பளித்த கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் அவர்களுக்கும், பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்களுக்கும், சட்டப் பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி அவர்களுக்கும், ஆதிதிராவிடர் நலக்குழு மாநில செயலாளர் கிருஷ்ணசாமி அவர்களுக்கும் இந்த கூட்டம் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது.

தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மக்களின் விளிம்பு நிலை மாறி, வாழ்வாதாரம் உயர, அண்ணல் அம்பேத்கர் தொழில்முனைவோர் திட்டம் என்ற மாபெரும் புரட்சிகரமான திட்டத்தை உருவாக்கி அம்மக்களின் வாழ்க்கை மேம்படவும், பொருளாதாரம் மேம்படவும் வழி வகை செய்திட்ட, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் அவர்களுக்கும், பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்களுக்கும் இந்த கூட்டம் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது.

மேற்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் கலந்து கொண்டு மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் கழக ஆதிதிராவிடர் நலக்குழு நிர்வாகிகளை அறிமுகப்படுத்தி, பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ.வேலு சிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் சட்டப்பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, கழக மருத்துவரணி துணை தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை,

மாவட்ட அவைத் தலைவர் கோ.கண்ணன், தலைமை செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், தலைமை செயற்குழு உறுப்பினர் பொன்.முத்து, மாவட்ட துணை செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான மு.பெ.கிரி, தலைமை செயற்குழு உறுப்பினரும், சட்டமன்ற உறுப்பினருமான பெ.சு.தி.சரவணன்,

மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட துணை செயலாளர்கள் ப்ரியா ப.விஜயரங்கன், விஜயலட்சுமிரமேஷ், மாநில தொ.மு.ச., துணைத் தலைவர் க.சௌந்தரராசன், நகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன், ஒன்றிய செயலா ளர்கள் அ.சிவக்குமார், மு.பன்னீர்செல்வம், வி.பி. அண்ணாமலை, ஆராஞ்சி ஆறுமுகம், சி.சுந்தர பாண்டியன், மெய்யூர்.சந்திரன், த.ரமணன், பெ. கோவிந்தன், ப.கேசவன், கோ. ரமேஷ், சி.மாரிமுத்து, எஸ்.சிவசேமன், க. சுப்பிரமணி, இரா.ராஜேந்திரன், ஆர்.வி.சேகர், கி. ஆறுமுகம், பா.ராம ஜெயம், த.செந்தில்குமார், அ. ஏழுமலை, த.மனோகரன்,

பொதுக்குழு உறுப்பினர்கள் அ.தண்டபாணி, நா.பழனி, து.கென்னடி, கு.பாலசுப்பிரமணி, க.பிரபாகரன், கா.சு.இளங்கோவன், அன்பரசிராஜசேகரன்,

பேரூர் செயலாளர்கள் சி.கே.அன்பு, ப.முருகையன், மு.அன்பழகன், எம். சீனுவாசன், பகுதி பொறுப்பாளர்கள் சு.விஜி (எ) விஜயராஜ், அ.கோவிந்தன், ந.சீனுவாசன், குட்டி க.புகழேந்தி, சி.சண்முகம், பா.ஷெரீப் மற்றும் நகர, ஒன்றிய, பேரூர் கழக ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர்கள், துணை அமைப்பா ளர்கள், கழக முன்னோடி கள் உட்பட ஏரளமானோர் கலந்து கொண்டனர்.

நிறைவாக நகர ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் எம்.குணா (எ) குணாளன் நன்றி கூறினார்.

தேனி மாவட்டம் வைகை அணையில் இருந்து மதுரை திண்டுக்கல் மாவட்டம் விவசாயத்திற்கு விநாடிக்கு 900 கன அடி வீதம் தண்ணீரை ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி, பத்திரபதிவு துறை அமைச்சர் மூர்த்தி, தேனி வடக்கு மாவட்ட செயலாளர் தங்கதமிழ்செல்வன் எம்.பி., தெற்கு மாவட்ட செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ., சரவணகுமார் எம்.எல்.ஏ., மகாராசன் எம்.எல்.ஏ., வெங்கடேசன் எம்.எல்.ஏ. மற்றும் தேனி ஆட்சியர் ரஞ்சித்சிங்,மதுரை ஆட்சியர் சங்கீதா, திண்டுக்கல் ஆட்சியர் சரவணன் ஆகியோர் திறந்து வைத்தனர்.

முரசொலியே ஒரு வரலாறு!

பேரா. சுப.வீரபாண்டியனின் ஒரு நிமிட செய்தி!

1942 ஆம் ஆண்டு முதல் இன்று வரையில் வெளிவந்து கொண்டிருக்கின்ற ஒரு ஏடு ‘முரசொலி’ என்பதை நாம் அறிவோம்.

ஆனால், அது வெறும் ஏடன்று. அதைக் கொண்டு வருவதற்கு தலைவர் கலைஞர் அவர்கள் எத்தனைப் போராட்டங்களைச் சந்தித்திருக்கிறார் என்பதைப் பார்த்தால்; அதுவே ஒரு வரலாறு என்று தோன்றும்.

1942 ஆகஸ்ட் 10ஆம் தேதி முதல் ‘முரசொலி’ வெளிவந்தது என்றாலும் அது வெறும் துண்டறிக்கையாகத்தான் வந்தது. அதையும் கூட தொடர்ந்து நடத்த முடியவில்லை.

பிறகு 1948 ஆம் ஆண்டிலிருந்து வந்தது.

நின்று போன முரசொலி 1954 ஆம் ஆண்டிலிருந்து வார இதழாக வந்தது.

அது எப்போது நாளேடாயிற்று.?

பெரியார் பிறந்த நாளில்; அதுவும் பெரியாரை விட்டுப் பிரிந்திருந்த நேரத்தில் தி.மு.க.வில் இருந்த நேரத்தில் கலைஞர் அவர்கள், பெரியார் பிறந்தநாளான செப்டம்பர் 17 ஆம் நாள் அன்று தான், 1960 ஆம் ஆண்டு, முரசொலியை ஒரு நாளேடாக நடத்தத் தொடங்கினார்.

ஒவ்வொரு கட்டத்திலும் அவர் சந்தித்த சிக்கல்கள் பல!

அது துண்டறிக்கையாக வருகிற போது கூட அதில் வந்த செய்திக்காக சிதம்பரத்திற்கு கூட்டத்திற்கு வரக் கூடாது என்று கலைஞருக்கு காவல் துறை தடை விதித்தது.

பிறகு வார ஏடாக ஆன பிறகு முகவர்கள் பணம் தரவில்லை.

எத்தனையோ போராட்டங்களைச் சந்தித்து, சந்தித்துத்தான் முரசொலி இன்றைக்கும் வெளிவந்துக் கொண்டிருக்கிறது!

பேராசிரியர்
சுப.வீரபாண்டியன்

செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தலைமை!

திண்டிவனம் சட்டமன்றத் தொகுதி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சிறப்புரையாற்றினார்!

திண்டிவனம் ஜூன் 15.

விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் திண்டிவனம் சட்டமன்ற தொகுதி நிர்வாகிகள் கலந்து கொண்ட ஆலோசனை கூட்டத்தில் விழுப்புரம் மண்டல பொறுப்பாளரும் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர். கே பன்னீர் செல்வம் கலந்து கொண்டு 2026சட்டமன்றத் தேர்தலுக்கு பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ தலைமை தாங்கினார்.

விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் 2026சட்டமன்றத் தேர்தல் குறித்து திண்டிவனம் சட்டமன்றத் தொகுதி நிர்வாகிகள் கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டம் திண்டிவனத்தில் நடைபெற்றது.

விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளரும், செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் தலைமையில் நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில்

விழுப்புரம் மண்டல பொறுப்பாளரும், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம். ஆர். கே .பன்னீர்செல்வம் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார்.

கூட்டத்தில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சரும், விழுப்புரம் மண்டல பொறுப்பாளர் எம். ஆர். கே. பன்னீர்செல்வம் பேசுகையில்:

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான திராவிட மடல் ஆட்சியில் எல்லோருக்கும் எல்லாம் என்ற தொலை நோக்கு சிந்தனையுடன் ஏழை எளிய மக்களுக்கு தினம் தினம் பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார் தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்கள்.

அந்த வகையில்கழகத்தின் அனைத்து பொறுப்பில் உள்ள கழக நிர்வாகிகள் முதலமைச்சரின் அனைத்துதிட்டங்களையும்வாக்காளர் இடத்தில் கொண்டு சேர்க்க வேண்டும்.

எதிர்வரும் 2026 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் திண்டிவனம் தொகுதியில் முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் தான் போட்டியிடுகிறார் என்று நினைத்து அனைவரும் ஒன்று இணைந்து தேர்தல் பணி ஆற்றவேண்டும்.

திண்டிவனம் தொகுதியில் போட்டியிடும் கழக வேட்பாளரை அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறுவதற்கு கழகத்தினர்கள், மற்றும் பி. எல். ஏ, பி. எல்.சி., நிர்வாகிகள் தீவிர பணியாற்ற வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

முன்னதாக விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ பேசுகையில்:

தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற நான்காண்டு காலத்தில் உலக நாடுகள் பாராட்டு வகைகள் பல்வேறு சிறப்பு திட்டங்களையும், ஏழை எளிய மக்களுக்கு உன்னத திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். அந்த வகையில் முதலமைச்சர் கொண்டுவந்த அனைத்து திட்டங்களையும் திமுக நிர்வாகிகள் அனைவரும் ஒற்றுமையுடன் திண்ணை பிரச்சாரம் மேற்கொண்டு திராவிட மாடல்ஆட்சியின்திட்டங்களை பொது மக்களிடம் எடுத்து கூறி எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலில் செஞ்சி, மயிலம் ,திண்டிவனம் ஆகிய மூன்றுசட்டமன்ற தொகுதிகளில் கழகத்தின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை வெற்றி பெற செய்து முதலமைச்சரிடம் வெற்றியை கொண்டு சேர்க்க வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

கூட்டத்தில் திண்டிவனம் தொகுதி மேற்பார்வையாளர் ஜாபர் அலி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சீத்தாபதி சொக்கலிங்கம், தலைமை தீர்மான குழு உறுப்பினர் செஞ்சி சிவா ,மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், பொருளாளர் ரமணன். மாவட்ட துணை செயலாளர்மரக்காணம் ரவிக்குமார்,ஒன்றிய செயலாளர்கள் சொக்கலிங்கம், தயாளன், பழனி, ரவிச்சந்திரன், செழியன், திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன், நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன்,செயற்குழு உறுப்பினர் சீனு சின்னராஜ், பொதுக்குழு உறுப்பினர் கதிரேசன், அனைத்து அணி அமைப்பாளர்கள்தங்கராஜ்,ராஜ சக்தி, கோபிநாத்,விஜயராகவன், சந்திரன், திருமலை, செந்தில் முருகன், சிவ காமி, நடுக்குப்பம் செந்தில் குமார், ரவிச்சந்திரன், ராஜா, காதர் நவாஸ், முன்னாள் மாவட்ட துணை செயலாளர் அசோகன்,முன்னாள் நகர செயலாளர் கபிலன்,மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் பாபு,நகர இளைஞரணி அமைப்பாளர் சதீஷ், உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

துணை முதலமைச்சர் சிவகங்கை வருகையை முன்னிட்டு நடைபெறும் பந்தல் மேடைப்பணியினை கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர்.. பேரியகருப்பன் பார்வையிட்டார். உடன் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் சிவகங்கை நகர் மன்ற தலைவர் நகர கழக செயலாளர் சி.எம்.துரைஆனந்த் திருப்புவனம் பேருராட்சி மன்ற தலைவர் மாவட்ட கழக துணைச் செயலாளர் த.சேங்கைமாறன், மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.